546—

கரும்புக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை.

* 3536—டாக்டர் தே. குமாரதாஸ்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) நடப்பாண்டில் கரும்புக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை எவ்வளவு?

(ஆ) இதை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1990–91 கரும்பு பருவத்திற்கு (அக்டோபர் 1990 முதல் செப்டம்பர் 1991) மைய அரசு நிர்ணயம் செய்த சட்டபூர்வ கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.230. இதன் அடிப்படையில் மாநில அரசு பரிந்துரை விலையாக ஒரு டன் கரும்புக்கு (8.5 சதவீதம் சர்க்கரைத் திறன் கொண்டது) ரூ 280 என நிர்ணயம் செய்யப்பட்டது. இத்துடன் ஒரு டன்னுக்கு ரூ. 10ம் மானியமாக வழங்க ஆணையிடப்பட்டது. 8.5 சதவீதத்திற்கு மேல் கிடைக்கும் ஒவ்வொரு 0.1 % சர்க்கரைத் திறனுக்கும் குவிண்டால் ஒன்றுக்கு 32.9412 பைசா வீதம் கொடுக்கப்படும். தமிழகத்தில் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரைத் திறன் அடிப்படையில் கொடுக்கப்படும் விலை அரசு மானியம் உட்பட ரூ. 290 முதல் ரூ. 362 வரையில் உள்ளது.

(ஆ) இல்லை.

547—

* 6143—திரு. அ. பாப்பா சுந்தரம்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1991–92 ஆம் ஆண்டு 8.5 சதவீதம் சர்க்கரைச் சத்துள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு எவ்வளவு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

(ஆ) மைய அரசு அறிவித்தது எவ்வளவு?

(இ) மாநில அரசு கரும்புக்கு என்ன விலை நிர்ணயித்துள்ளது?

1992 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (ஆ) மற்றும் (இ): மைய அரசு, 1991–92 ஆம் ஆண்டு கரும்புபருவத்திற்கு, 8.5 சதவீத சர்க்கரைச் சத்துள்ள கரும்புக்கு, சட்டபூர்வ குறைந்த பட்ச விலை ஒரு டன்னுக்கு ரூ. 260 என நிர்ணயம் செய்துள்ளது. 8.5 சதவீதத்திற்கு மேல் கிடைக்கும் ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கும் சர்க்கரைச் சத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 30.5882 பைசா வீதம் வழங்கவும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதனடிப்படையில் மாநில அரசு, 1991–92 ஆம் ஆண்டு கரும்பு பருவத்திற்கு 8.5 சதவீத சர்க்கரைச் சத்துள்ள கரும்பு டன் ஒன்றுக்கு 300 ரூபாய் என தனது பரிந்துரை விலையை நிர்ணயம் செய்துள்ளது. 8.5 சதவீத சர்க்கரைச் சத்திற்கு மேல் கிடைக்கும் ஒவ்வொரு 0.1 சதவீத சர்க்கரைச் சத்திற்கும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35.2942 பைசா வீதம் வழங்கப்படும். கரும்பு உற்பத்திக்கு இடப்படும் மூலப் பொருட்களின் விலை உயர்வைக் கருதி, அரசு மானியமாக ஒரு டன் கரும்புக்கு ரூ. 10 வீதம் வழங்க ஆணை வெளியிட்டுள்ளது. எனவே, தமிழகத்தில் உள்ள கரும்பு விவசாயிகள் குறைந்த பட்சமாக ஒரு டன் கரும்புக்கு ரூ. 310 என்றும், அதிக பட்சமாக, சர்க்கரைச் சத்தின் அடிப்படையில் ரூ. 373.50 வரையிலும் பெறுவார்கள். சர்க்கரைச் சத்தின் அடிப்படையில் வழங்கப் படும் விலை, சென்ற ஆண்டைவிட (1990–91) இந்த ஆண்டு (1991–92) குறைவாக வழங்கும் நிலையில் உள்ள சர்க்கரை ஆலைகள் சென்ற ஆண்டு வழங்கிய விலையையே இந்த ஆண்டும் வழங்க வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10–25

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, தமிழகத்தில் 310 ரூபாய் டன்னுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும் அதிக சர்க்கரை சத்துள்ளதற்கு 373 ரூபாய் என்றும் குறிப்பிட்டிருக் கிறார்கள். ரூ.310-க்கு மேலே நீங்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகை யில் எத்தனை பேருக்கு வழங்கியிருக்கிறீர்கள் என்பதை அறிய ஆசைப்படுவதோடு, இன்றைய தினம் வேலிக் கருவை மரத்திற் குக்கூட ஒரு டன்னுக்கு 500 ரூபாய் இருக்கிறது. குறைந்த பட்சம் அந்த வேலிக் கருவை மரத்திற்குக் கொடுக்கக்கூடிய அந்த 500 ரூபாய் பணமாவது, கரும்பிற்கும் கொடுக்கிற விதத்தில் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 31 சக்கரை ஆலைகள்

இருக்கின்றன. அந்த ஆலைகள் இந்த ஆண்டு ரூபாய் 310-க்கு மேல்தான் ஒரு டன்னுக்கு கரும்பிற்கு வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 8.5 கட்டுமான சத்துள்ள கரும்பிற்கு விலையை நம் அரசு நிர்ணயித்திருக்கிறது என்று சொன்னார்கள். நாங்கள் இந்தக் கேள்வி கேட்டது, ஆகஸ்டு மாதத்திலே கேட்கப்பட்ட கேள்விகள். இருந்தாலும், 8.5 கட்டுமான சர்க்கரை, எந்த ஆண்டு 8.5 என்று கணக்கிட்டு, அந்தத் தொகை வழங்கப்படுகிறது. சென்றஆண்டு வந்தகணக்கை வைத்து, இந்த ஆண்டு அந்த விலையைத் தருகிறார்கள். இந்த ஆண்டு சர்க்கரை கட்டுமானத்தை வைத்து, அடுத்த ஆண்டு விலையைத் தருகிறார்கள். ஆகவே, மத்திய அரசினுடைய கொள்கையே தவறாக இருக்கிறது என்பது விவசாயிகளுடைய கருத்து. ஆகவே, இந்த ஆண்டு கட்டுமான சர்க்கரைக்கு அந்தந்த ஆண்டு விலையையே நிர்ணயிக்கப்படுமா? அல்லது, தனியாக விவசாயிகளினுடைய கரும்பை ஆராய்ந்து, அந்தக் கட்டுமானத்திற்கு விலை தரப்படுமா என்பதை நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தி, அந்த விலைகளை, அந்தந்த ஆண்டு கட்டுமான சர்க்கரைக்குள்ள விலையையே, அல்லது தனிப்பட்ட அந்தந்த விவசாயிகளினுடைய கரும்புச் சர்க்கரையினுடைய தரத்தை ஆராய்ந்து விலை தரப்படுமா என்பதை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவதோடு, இந்த 8.5 என்பதை குறிப்பது யார்? அந்த ஆலைகளிலே நமது அரசு அதிகாரிகள் யாராவது இருக்கிறார்களா? அது சரியான கணக்கா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது மத்திய அரசு. மத்திய அரசு நிர்ணயம் செய்யக்கூடிய விலை, விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்ற கருத்திலே தான் மாநில அரசு அவ்வப்போது பரிந்துரைகளைச் சிபாரிசு செய்கிறது. இந்த 8.50 சதவிகிதம் சத்து என்பது கடந்த ஆண்டு சராசரியாக அந்த ஆலைக்குக் கிடைத்த சர்க்கரைச் சத்தின் அடிப்படையிலேதான் விலை நிர்ணயத்தை மத்திய அரசு செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கக்கூடியது. வருகிற ஆண்டிலே மத்திய அரசுக்கு இது தொடர்பாக இவ்வரசு கடிதம் எழுதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 548, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.